2017 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் 5 இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, அங்குள்ள விவசாயிகள் முழுவதுமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கு ஆய்வுகள் மேற்கொண்டு, தேவைப்படுமாயின் அங்கே குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கான ஆய்வறிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பி, அதனடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2018 ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது முதல் மூன்றாவது வரையிலான 3 அறிக்கைகளை இக்குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*